**எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் காசநோய் புதிய நிதியிடல் மாதிரிக் கூறு - 2019**

---

எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் காசநோய் புதிய நிதியிடல் மாதிரிக் கூறின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி**

---

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், சுகாதார அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. இலங்கையில் காசநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை வலுப்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் காசநோய் புதிய நிதியிடல் மாதிரிக் கூறு என பெயரிடப்பட்ட காசநோய் கூறுகளின் கீழ் அமுல்பமுத்தப்படுகின்றது. மானிய உடன்படிக்கையின் பிரகாரம், மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 404.89 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 2.588 மில்லியன் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்தால் நிதியளிப்புச் செய்வதற்கு இணங்கப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 சனவரி 01 இல் தொடங்கி இருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2024 திசெம்பர் 31 வரையிலும் நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

இந்த அறிக்கையின் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  எனது கணக்காய்வின் போது நான் அடையாளம் காணும் யாதேனும் உள்ளகக் கட்டுப்பாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட, குறிப்பிடத்தக்க கனக்காய்வு கண்டுபிடிப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகைக்கு உட்பட்ட நபர்களுடன் நான் தொடர்பு கொள்கிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு பிரச்சனை | விளைவு | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக உலகலாவிய நிதியத்திடமிருந்து நேரடியாக பெறப்பட்ட மானியங்களிற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் காசு அடிப்படையிலோ அல்லது அட்டுறு அடிப்படையிலோ வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | உலகளாவிய நிதியத்திட மிருந்து நேரடியாக பெறப்பட்ட மானியங்களை குறைத்துக் கொள்வதற்கோ கூட்டிக் காட்டுவதற்கான இடர் | செயற்திட்டமானது இலங்கை அரசாங்கத்திற்கும் உலகளாவிய நிதியத்திற்கும் அறிக்கையிடுகின்றது. உலகளாவிய நிதிய அறிக்கையிடலானது வருடத்திற்கு ஒருமுறை வேண்டப்படுகின்றது. பிரதான அறிக்கையிடல் முறைமையானது டியூடிஆர் ஆகும். இது காசு அடிப்படையிலும் ஜீஎவ் வழிகாட்டலுக்கு இணங்கவும் தயாரிக்கப்படுகின்ற துடன் நிதிக் கூற்றுக்களானது வெளியக கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப் படுவதுடன் இது சீராக்கப்பட்ட அட்டுறு அடிப்படையில் அறிக்கையிடப் படுகின்றது. (ஜீஎவ் வழிகாட்டலுக்கு இணங்க) எனவே இரண்டு தொகைகளும் இந்தக் காரணங்களால் வேறுபடுகின்றது. | உபகரணங்கள் கொள்வனவுக்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

| கணக்காய்வு பிரச்சனை | விளைவு | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல், காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்காமையால் | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் | கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படு வதுடன் எதிர்காலத்தில் | இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் |

| | | | |
|---|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவைப்பாடு களுடன் இணங்காமை | இணங்கப்படும். | தயாரிக்கப்பட வேண்டும். |

**2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு பிரச்சனை | விளைவு | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| பொறுப்பான உத்தியோகத்தரால் பொதுப் பேரேடுகளால் அனுமதிக்காமலும் பொதுப்பேரேடுகளினூடாக மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் பேரேட்டுக் கணக்குகளிற்கு மாற்றப்படாமலும் இருந்த போதிலும் ரூபா 202 மில்லியனிற்கான பொதுப் பேரேட்டுப் பதிவுகள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது பதியப்பட்டிருந்தது. இதன் விளைவால், நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகைகள் பேரேட்டுக் கணக்குகளில் காட்டப்பட்ட மீதிகளுடன் இணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை. | பிழையான பேரேட்டுப் பதிவு களினூடாக நிதிக் கூற்றுக்கள் மிகைப்படுத்தப் பட்டிருக்க கூடும். | செயற்திட்டமானது சாதாரணமாக வெளிநாட்டு கணக்காய்வை (ஜீஎவ் கணக்காய்வை) 2019 ஆம் அண்டு நிதிக் காலப்பகுதியில், மீளாய்வு செய்த பின்னர் இறுதி பேரேட்டுப் பதிவுகளை பதிகின்றது. ஜீஎல் கணக்காய்வானது 2021 பெப்ரவரி 21 இல் நிறைவடைந் திருந்தது. கணக்காய்வில் ஏற்பட்ட தாமதத்துடன் 2019 ஜீஎவ் கணக்காய்வு கணக்காய்வு முடிவடைவதற்கு முன்னர் செயற்திட்ட அலுவலகமானது கையெழுத்திடும் அமைச்சிற்கு நிதிக் கூற்றுக்களை அனுப்பியதுடன் இது உள்நாட்டு கணக்காய்விற்கு (எஸ்எல் கணக்காய்வு) சமர்ப்பிக்கப்பட்டது. இந்த சர்ச்சையானது இந்தக் காரணத்தால் ஏற்பட்டிருந்தது. | பொதுப்பேரேடு பதிவுகள் தொடர்பில் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை அமுல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.4 இணக்கஞ்செய்யப்படாத மீதிகள்**

| | கணக்காய்வு பிரச்சனை | விளைவு | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | குறிப்பு இலக்கம் 05 இன் பிரகாரம், மீளாய்வாண்டின் போது உண்மையான காசுச் செலவினம் ரூபா 122,042,011 ஆக காட்டப்பட்டிருந்த அதேநேரம் 10.1 ஆம் குறிப்பின் பிரகாரம் திறைசேரியிடமிருந்து மாற்றப்பட்ட உள்ளபடியான நிதியம் ரூபா 122,002,259 ஆக காட்டப்பட்டிருந்தது. அதன் விளைவால், ரூபா 39,752 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | நிதிக் கூற்றுக்களில் எண்களை ஒப்பிடாமல் காட்டப் பட்டிருந்தது. | இது அச்சிடல் குறைபாடாக இருந்ததுடன் இது 2020 நிதிக் கூற்றுக்களில் சரி செய்யப்படும். | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட இலக்கங்களை திருத்துதானது கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் சரி பார்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | செலுத்த வேண்டிய தொகையானது 2019 சனவரி 01 இல் ரூபா 95,023,956 ஆக முன்கொண்டு வரப்பட்டதுடன் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றின் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் இறுதி மீதி ரூபா 95,897,409 ஆக இருந்தது. ஆரம்ப மீதி மற்றும் முன்னைய ஆண்டின் இறுதி மீதிகளிற்கிடையில் ரூபா 873,453 வித்தியாசம் இணக்கஞ் செய்யப்பட்டிருக்க வில்லை. | ஆரம்ப மீதிகளை மிகைப் படுத்துவதற்கான இடர் | கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. | முன்னைய ஆண்டிற்கான மீதிகளுடன் ஆரம்ப மீதிகள் இணக்கஞ் செய்யப்பட வேண்டும். |

**2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| கணக்காய்வு பிரச்சனை | விளைவு | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான செலவழிக்கப்படாத கடப்பாடு பொறுப்புகளிடமிருந்து மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்ட ரூபா | செயற்திட்டத் தினுள் தொடரும் மீதிகளை பதிவழிப்பு | கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. கணக்கீட்டு முறைமையில் 2014/2015/2016 ஆம் | பதிவழிப்பதற்கு முன்னர் மீதிகள் இனங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 3,670,594 தொகைக்காக செயற்திட்ட அலுவலகத்தில் போதியளவும் சரியானதுமான கணக்காய்வு சான்றுகள் இருக்கவில்லை. | செய்வதற்கான இடர் | ஆண்டுகளிலிருந்து ரூபா 3,670,594 தொகையானது முன் கொண்டு வரப்படுகின்றதுடன் 2019-2021 காலப்பகுதிக்காக, செயற்திட்டமானது புதிய கம்பனியை உருவாக்கலிற்கான கொடுக்கல் வாங்கலை பதிவு செய்வதற்கும் 2019 - 2021 காலப்பகுதியில் பொறுப்பேற்பதற்கும் ஆரம்பித்துள்ளது. ஜீஎவ் ஆனது முன்னைய மானிய கடப்பாடுகளை செலுத்தாது. எனவே, புதிய மானியத்தின் (2019-2021) புதிய கடப்பாட்டினை சமப்படுத்துவதற்கு இந்தத் தொகையை பதிவழிப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. | |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கணக்காய்வு பிரச்சனை | விளைவு | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) செயற்திட்ட காலப்பகுதியின் போது பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 461.68 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 2.951 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில்ல ரூபா 122 மிலியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 0.682 மில்லியன் மாத்திரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் ரூபா 5.25 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 0.029 மில்லியன் | செயற்திட்ட நோக்கங்களை அடைதல் மற்றும் காலரீதியில் பயன்படுத்த லிலுள்ள இடர் | கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. | ஒழுங்கான முறையில் ஒதுக்கீட்டை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் இறுதியளவில் அமைச்சிற்கு மீள் நிதியிடப்பட்டிருந்தது. | | | |
| (ஆ) | செயற்திட்டத்தின் பதினொரு பாதீட்டு வரிசை நடவடிக்கைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 203,801 மில்லியனிற்கு சமனான ரூபா 31,884,431 மொத்த ஒதுக்கீடு உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படாது மீளாய்வாண்டின் போது சேமிக்கப்பட்டிருந்தது. | உரிய நடவடிக்கை களை அமுலாக்கு வதிலுள்ள இடர் | கவனத்தில் கொள்ளப்பட்டது. வழமையாக செயற்திட்டமானது வருட இறுதியளவில் பயன்படுத்தப்டாதுள்ள தற்போதுள்ள பாதீட்டு வரிசைகளை மீள் மதிப்பிடப்படுகின்றது. பீயூடீஆர் கோரிக்கையில் வருட இறுதியளவில் பீஎல் மீள்நிகழ்ச்சியிடுகின்ற இந்த செலவழிக்கப் படாதவை 2020 இல் சமர்ப்பிக்கப் படுகின்றது. பியூடிஆர் 2019 இல் மீள் ஒதுக்கப்பட்டிருந்தது. | குறித்த நோக்கத்திற்காக நிதிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்ட காலப்பகுதியின் போது 92 பாதீட்டு வரிசை நடவடிக்கைகள் 12 பாதீட்டு கிரய வகைப்படுத்தல் களினூடாக செயற்திட்ட காலப்பகுதியின் போது அமுல்படுத்துவதற்கு பட்டியலிடப் படுத்தப்பட்டது. எனினும், 24 பாதீட்டு வரிசை நடவடிக்கைகளின் கீழ் ரூபா 46.3 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 295,941 மில்லியன் ஒதுக்கீடு அவதானிக்கப்பட்டதுடன் அதில் ரூபா 18.72 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 104,343 மீளாய்வாண்டின் இறுதியளவில் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்டம் தாதிமார்கள், பீஎச்ஐ மற்றும் ஏனைய வைத்திசாலை | செயற்திட்ட நோக்கங்களை அடைதல் மற்றும் உரிய காலத்தில் ஒதுக்கீடுகளை பயன்படுத்து வதிலுள்ள இடர் | கருத்து வழங்கப்பட்டிருக்க வில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளை பாதீட்டுடன் இணங்குகின்றது என்பதை தொடர்ச்சியாக உறுதிப்படுத்துவதற்கும் செயற்திட்ட செயன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்து கண்காணிப்தற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| உத்தியோகத்தர்களை மாவட்ட அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தலின் பாதீட்டு வரிசை இலக்கம் 21 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 0.734 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 4,693 ஒதுக்கீட்டை விஞ்சி ரூபா 1.392 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 7,788 செலவழிக்கப்பட்டது. | | | |

**3.2 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

| கணக்காய்வு பிரச்சனை | விளைவு | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2008 இலிருந்து செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 523.08 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 2.888 மில்லியன் கிரயத்திலான நிலையான சொத்துக்கள் தொடர்பில் 2019 திசெம்பர் 31 அளவில் பௌதீகு சரிபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | செயற்திட்ட நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு பலவீன மாகவுள்ளது. | கவனத்தில் கொள்ளப்பட்டது. | பௌதீக சரிபார்த்தலை பூர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |